பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 27 சனிக்கிழமை 11.06.2022 கதிர் 109

## மேல் மாகாணத்தில் டெங்கு தாண்டவம்!




இலங்கையின் 16 மாவட்டங்களில் 83 சுகாதார உத்தியோகத்தர் பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக ☞2


## யாழில் டெங்கால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி இருந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்., ஆனைக்கோட்டைப் பகுதியை சேர்ந்த இ.ஜெகதீசன் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த 8ஆம் திகதி கடுமையான காய்ச்சலுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று 10ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## மட்டு., நாவற்குடாவில் இளைஞர் மர்ம மரணம்



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடாவில் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் ☞2

# கோட்டாபயவை உடன் வீட்டுக்கு அனுப்புங்கள்!

## அப்போதுதான் மக்களின் மனதை வெல்ல முடியும்; ரணிலிடம் சஜித் சுட்டிக்காட்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதாள பாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது. எனவே, கோட்டாபயவை உடன் வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும். ☞2



## டலஸ் எம்.பி. தலைமையில் மலர்கின்றது புதிய கூட்டணி

### தெற்கு அரசியலில் திடீர் திருப்பம்




சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்படும் இந்தக் கூட்டணியில் இணைவதற்குப் முக்கிய பல ☞2

## அரிசிக்கான உச்சபட்ச சில்லறை விலை ரூ.210

### - வெளிவந்தது வர்த்தமானி அறிவிப்பு




அரிசிக்கான உச்சபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


நுகர்வோர் விவகார அதிகார சபையால் இவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, சிவப்பு மற்றும் வெள்ளை

## 45 எம்.பிக்கள் படுகொலை!

### 66 வருடங்களில் என்கிறார் டலஸ்

இலங்கையில் கடந்த 66 வருடங்களில் 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.






1956 முதல் 2022 வரையான காலப்பகுதியிலேயே இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞2

## கோழி இறைச்சி, முட்டை விலை மீண்டும் சடுதியாக அதிகரிப்பு





கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன என்று அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. மக்காச்சோள தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் இந்த நிலைக்குக் காரணம் என்று ☞2

## அமரகீர்த்தி படுகொலை; இதுவரை 31 பேர் கைது!

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல அடித்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று நிட்டம்புவ பகுதியில் வைத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் ☞2

## ரஞ்சனுக்குப் பெரும் அநீதி; மன்னித்து விடுவியுங்கள்!

### ஜனாதிபதியிடம் பொன்சேகா கோரிக்கை

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலையிலுள்ள அவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் - என்று பீல்ட் மார்ஷல் சரத் ☞2



## சென்னையிலிருந்து வருகை தந்த நபர் ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கினார்!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2



## ரஞ்சனுக்குப் பெரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொன்சேகா எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார். ரஞ்சன்ராமநாயக்கவைச் சிறைச்சாலையில் சென்றுபார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஞ்சன் ராமநாயக்கவுக்குக் கடுமையான தண்டனை கிடைத்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியை அரசு மீள் பரிசீலிக்கும் என நம்புகின்றேன். அவர் மேலும் ஒன்பது மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்கவுள்ளமையால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்.

ரஞ்சன் ராமநாயக்க தனது இலட்சியங்கள் மற்றும் இலக்குகளைக் கைவிடவில்லை. தற்போது தனது கல்வி இலக்கை கடுமையாகப் பின்பற்றி வருகின்றார்.

சிறையிலிருந்து வெளிவந்தவுடன் ரஞ்சன் ராமநாயக்க தண்டனைக்கு முன்னர் எம்.பியாக இருந்ததைப் போன்று தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையாற்றுவார் - என்றார்.

## 45 எம்.பிக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமராக இருந்த எஸ்.டபுள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொலையே முதலாவது படுகொலையாகும். இறுதியாக அமரகீர்த்தி அத்துகோரல கொலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதி பதவியை வகித்த ஒருவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த ஒருவரும் எமது நாட்டில் கொல்லப்பட்டுள்ளனர். அதாவது 19 மாதங்களுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இக் கொலைகள் இடம்பெற்றுள்ளன - என்றார்.

## கோழி இறைச்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

விலங்குத் தீனிக்காக வருடாந்தம் 30 கோடி டொலர் தேவைப்படுகின்றது. இவ்வாறான நிலையில் மாதாந்தம் 3 கோடி டொலராவது விலங்கு உணவுக்காக வழங்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சந்தையில் முட்டை ஒன்றின் விற்பனை விலை 50 ரூபாவை எட்டியுள்ளது.

மேலும், ஒரு கிலோ கோழி இறைச்சி 1,200 ரூபா தொடக்கம் 1,300 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

## அமரகீர்த்தி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

24 வயதான குறித்த சந்தேகநபர், பஸ்யால - போலகந்தகம பகுதியைச் சேர்ந்தவராவார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், இதுவரையில் 31 சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## சென்னையிலிருந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்னையிலிருந்து வருகை தந்த நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 1.3 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## அரிசிக்கான.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டரிசியின் உச்சபட்ச சில்லறை விலை 210 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விலைகளை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மாவட்டம் அதிகளவிலான டெங்கு பரவும் மாவட்டமா கவும், 18 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதுக்க, பொரலஸ்கமுவ, ஹன்வெல்ல, கஹதுடுவ, பத்தரமுல்லை, இரத்மலானை, எகொட உயன மற்றும் கொதடுவ ஆகிய இடங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக கருதப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமுள்ள மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 51.2 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர் எனவும், கடந்த 08 நாள்களில் மாத்திரம் 2 ஆயிரத்து 416 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் டெங்கு நோயின் பரவலைக் குறைப்பதற்காக எதிர்வரும்15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தாங்கள் வாழும் சூழலை நுளம்புகள் பெருக்கம் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

24 மணி நேரமும் காய்ச்சல் இருந்தால் டெங்கு சந்தேகத்தின் பேரில் தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும் - என்றார்.

## டலஸ் எம்.பி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரமுகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

புதிய கூட்டணியின் சின்னம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை, அதன் நிறம் மஞ்சள் நிறமாக இருக்க வாய்ப்புள்ளது என்று புதிய கூட்டணியைக் கட்டியெழுப்புவதில் உறுதியாக உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் கட்டமைப்பில் உருவான மிகப்பெரிய கூட்டணியாக இது அமையும் எனவும் அந்த உறுப்பினர் குறிப்பிட்டார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான எம்.பிக்கள் குழுவொன்று தேர்தல் ஆணைக்குழுவுடன் நேற்று சந்திப்பொன்றை நடத்தியிருந்தது.

## மட்டு.நாவற்குடாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை 5.30 மணியளவில் கூலி வேலைக்குச் சென்று வீடு திரும்பிய இளைஞர் தாயாரிடம் குளிர்பானம் வாங்கி அருந்தி விட்டு தனது வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு நின்றுள்ளார்.

அவ்வேளையில் தாயாரிடம் பீடி வாங்கி வருமாறு மகன் கூற தாயார் கடைக்கு பீடி வாங்கச் சென்று திரும்பி வந்துபோது குறித்த நீர் ஊற்றிய இடத்திலேயே மகன் மூச்சின்றி இறந்து காணப்பட்டார்.

31 வயதுடைய ஆனந்தன் ஜெயராஜ் என்பவரே இவ்வாறு இறந்துள்ளார்.

காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கோட்டாபயவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.
ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகினால்தான் மக்களின் மனதை வென்று பிரதமர் ரணிலால் பணியாற்ற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்கின்றது. ஆனால், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய புள்ளியாக விளங்கும் கோட்டாபய வெட்கம் இல்லாமல் இன்னமும் ஜனாதிபதிக்கான கதிரையில் அமர்ந்திருக்கின்றார். தோல்வியடைந்த ஜனாதிபதியாகத் தான் செல்லமாட்டேன் என்று அவர் சவால் விடுகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டின் நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடன் வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதள பாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது.

ராஜபக்ஷ குடும்பத்தினரைக் காப்பாற்றவே பிரதமர் பதவியை ரணில் பொறுப்பேற்றார் என்று பலராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு ரணில் செயற்பட வேண்டும்.

கோட்டாபயவுக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையில் ரணில் ஈடுபடக்கூடாது - என்றார்.






நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ரணில் எனும் நரி

பலவீனமான நிலையில் பதவிக்கு வந்தால் அதிகாரத்தைச்செலுத்துவது கஷ்டம்தான். அந்த கையறுநிலை கோபமாக– சீற்றமாக – எரிச்சலாக வெடிக்கவே செய்யும்.

இலங்கையில் ஆறாவது தடவையாகப் பிரதமராகப் பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க நீண்ட அரசியல் பாரம்பரியமும் அனுபவமும் கொண்டவர். 'மிஸ்டர் கூல்' என்றும்கூட மதிக்கப்பட்டவர். நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பரபரப்பின்றி காரியமாற்றியவர். பல ஏற்ற, இறக்கங்களைக் கண்ட தந்திர நரிப் புத்திசாலி என்று பெயரெடுத்தவர்.

நாடாளுமன்றப் பேச்சுக்களில் கூட சீற்றத்தை வெளிக்காட்டாது, வார்த்தைகளில் – சொல்லாடல்களில் – ஆரவாரம் பண்ணாமல் ஆப்பு– சூடு – வைக்க கூடியவர்.

ஆனால், இப்போது இவை எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு வெறுங்கையோடு நிற்கின்றார்.

தனி ஒரு எம்.பியாக – கோட்டாபயவின் கடைக்கண் பார்வை என்ற அருளை மட்டும் நம்பி – பலவீனமான நிலையில், பிரதமர் பதவி என்ற அதிகாரத்திற்கு வந்தமையினாலோ என்னவோ அவரின் தனித்துவமான நல்ல பண்புகள் எல்லாம் அவரை விட்டு ஓடிப் பறந்து விட்டன.

பன்றியோடு சேர்ந்த பசுக் கன்றின் கதையாகிவிட்டது ராஜபக்ஷகளுடன் சேர்ந்த ரணிலின் பண்பியல்புகளும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மறைவையொட்டிய அனுதாபப் பிரேரணை மீதான உரையில் கலந்துகொண்டு பேசும்போது, நாடாளுமன்ற மரபுகளை – சம்பிரதாயங்களை – வழக்காறுகளை – ஒழுங்குகளை – மீறிச் சின்னத்தனமாக நடந்து கொண்ட ரணிலின் போக்கு அவர் இப்போது எத்தகைய கையறு நிலையில் அரசியல் செய்கின்றார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

ஆளும் தரப்புக்கு எதிராக மக்கள் சீற்றமுற்று வன்முறையில் இயங்கியமைக்கான காரணங்கள் யாது என்பதை மேலோட்டமாக குறிப்பிட்டு சாணக்கியன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்காக அந்த வன்முறைகளின் பின்னணியே அந்தத் தமிழ் எம்.பி.தான் என்ற மாதிரி விஷமத்தனமாக பேசியிருக்கிறார் ஒற்றை எம்.பி. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அரசியல் நயவஞ்சகத்தின் உச்சகட்டம் இத்தகைய வியாக்கியானம்.

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டபோது புலிகள் தவிர, பிறர் அனைவரும் அதனைக் கண்டித்தனராம். நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்த்தார்களாம். ஆனால் இப்போது இந்த வன்முறைக்கு எதிராக நாடாளுமன்றத்திற்குள் முதல் தடவையாக ஆதரவு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது, அதை சாணக்கியன் தெரிவித்துள்ளார் என்று அனுதாபப் பிரேரணை மீதான உரையில் கயிறு திரித்து இருக்கின்றார் ரணில்.

வன்முறைகளை நியாயப்படுத்தி சாணக்கியன் நாடாளுமன்றத்தில் உரையாற்றவில்லை. அந்த வன்முறைகளின் பின்னணிக் காரணம் யாது என்ற உண்மைகளை அவர் மனதில் பட்டவாறு அம்பலப்படுத்தியுள்ளார்.

அந்த உண்மை ராஜபக்ஷக்களுக்கு வக்காலத்து வாங்கப் புறப்பட்டுள்ள ரணிலுக்கும் சேர்ந்து சுட்டு விட்டது. அதனால் முறையற்ற விதத்தில் அவர் துள்ளிக் குதிக்கின்றார்.

சாணக்கியனைப் பார்த்து அப்படிக் கேள்வி எழுப்புவதற்கு எந்தத் தகைமையுமற்றவர் ரணில் என்பதுதான் உண்மை.

1977 முதல் 89 வரை அவரும் அவரது சகாக்கள் சிறில் மத்தியூ, டாக்டர் நெவில் பெர்னாண்டோ வகையறாக்களும் இதே நாடாளுமன்றத்தில் இருந்து தமிழர்களுக்கு எதிராக பேசிய வன்முறை பட்டியல் நீண்டது. எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தை காலிமுகத்திடலில் மூங்கில் வில்லில் கட்டி உடல் இரண்டாகப் பிளக்க பிரித்துப் பிய்த்தெறிய வேண்டும் என்று அவரது சகாக்கள் உரையாற்றியமையைச் சேர்ந்து கேட்டுக் கொண்டு அரசாட்சி செய்த அணியைச் சேர்ந்தவர் அவர். வன்முறையைத் தூண்டுவது குறித்து நாடாளுமன்றுக்குள் உரையாற்றுவது பற்றி நியாயம் கேட்க அடிப்படை தகுதியற்றவர்.

ரணிலை ஒரு நரித் தந்திரசாலி என்று இருபது வருடங்களுக்கு முன்னரே மதியுரைஞர் பாலசிங்கம் கூறியமையை அவர் இப்போதும் நிரூபித்து நிற்கிறார். அவ்வளவே. ரணில் எனும் நரி.

# அறுவடைக்கு எரிபொருள் கோருகின்றனர் விவசாயிகள்!

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புளியம்பொக்கனை நெத்தலியாற்றுப் பகுதியில் கழிவு நீரைக் கொண்டு தண்ணீர் பம்பிமூலம் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக பெறப்பட்ட சேதன உரத்தை கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

இந்த நிலையில் அறுவடை மேற்கொள்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே எரிபொருளை பெறுவதற்காக வரிசையில் வாகனம் நிறுத்தப்பட்டும் எரிபொருள்பெறமுடியாதநிலைகாணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இன்னும் சிலநாள்களுக்குள் எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால் நெற்கதிர்கள் சேதமடைந்து போய்விடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு எமது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எமக்கு எரிபொருளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆர்ப்பாட்டக்காரர்களின் கரங்களில் இரத்தக்கறை!

## நாடாளுமன்றில் மஹிந்த இப்படி கருத்து



காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொலையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மதத் தலைவர்களால் கூட மே 9 ஆம் திகதி வன்முறையை தடுக்க முடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தை அமைதியான போராட்டம் எனக் கருதமுடியாது என அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கரங்களில் குருதி படிந்துள்ளது என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள போராட்டத்துக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு 20 ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றது!

## ரணில் அறிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இம்மாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் பிரதமருக்கும் இடையில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இம்மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்தில்உடன்பாடுஎட்டப்படும்என நம்புகிறேன் எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

# வங்கிக்கடன் விண்ணப்பங்களை நிராகரிக்கின்றமை நாட்டில் அதிகரிப்பு

## மத்தியவங்கி தகவல்

*வங்கிகள் கடன் விண்ணப்பங்களை நிராகரிப்பது அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*மக்களின் வருமானத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாடிக்கையாளர்களால் தங்கள் கடன்களை மீள செலுத்த முடியாது எனக் கருதும் வங்கிகள் கடன் விண்ணப்பங்களே அதிகளவில் நிராகரிக்கின்றன.*

*மத்திய வங்கி சமீபத்தில் மேற்கொண்ட கடன் ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளது.*

*இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் வங்கிகளால் நிராகரிக்கப்பட்ட கடன்விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகம் என்பது இந்த ஆய்வின் போது தெரியவந்துள்ளது. முதல் மூன்று மாதங்களில் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.*

*ஆய்வில் கலந்துகொண்டவர்களின் மனோநிலையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது தற்போதைய காலாண்டில் நிராகரிக்கப்படும் கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது.*

*இதன் காரணமாக தனியார் துறை கடன் வளர்ச்சியடையலாம் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

*2021 இறுதி காலாண்டுடன் ஒப்பிடும்போது 2022 இன் முதல்காலாண்டில் நிராகரிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்கள் அதிகம் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.*

# விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட மர்ம ரேடியோ சிக்னலை பதிவு செய்து சீன விஞ்ஞானிகள் சாதனை



விண்வெளியில் இருந்து மர்ம ரேடியோ சிக்னல் ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சீனாவின் கியூசோ மாகாணத்தில் உள்ள அதிநவீன தொலைநோக்கி மூலம் விண்வெளியில் இருந்து வந்துள்ள மர்மமான ரேடியோ சிக்னல்களை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த சிக்னல் பூமியில் இருந்து 3 பில்லியன் ஒளி ஆண்டு தொலைவில் இருந்து வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மர்ம ரேடியோ சிக்னல்கள் வேறொரு பிரபஞ்சத்தில் இருந்து வந்திருக்கலாம் என்றும் கூறும் சீன அறிவியல் அகாடமி விஞ்ஞானிகள், ரேடியோ சிக்னல்கள் குறித்து தீவிரமாக ஆய்விட்டு வருகிறோம் என தெரிவித்துள்ளனர். வேற்று கிரகங்களில் உயிரினங்கள் உள்ளனவா? என நீண்ட கால ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சீனாவில் கண்டறியப்பட்டுள்ள மர்ம ரேடியோ சிக்னல்கள் அந்த ஆராய்ச்சிக்கு கூடுதல் வலு சேர்த்துள்ளன.

## கட்டாய மரண தண்டனையை ரத்து செய்தது மலேசிய அரசு



கொலை மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட பல குற்றங்களில் தற்போது பயன்படுத்தப்படும் கட்டாய மரண தண்டனையை ரத்து செய்வதாக மலேசியா தெரிவித்துள்ளது.மரணதண்டனைக்குப் பதிலாக மற்ற தண்டனைகள் விதிக்க மலேசிய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது என பிரதமர் அலுவலக மந்திரி வான் ஜுனைடி துங்கு ஜாபர் தெரிவித்துள்ளார். மலேசியாவில் மேலும் 22 குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு சட்டத்தில் ஒப்புதல் இருந்தது. இந்நிலையில், கட்டாய மரண தண்டனை அங்கு ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், மரண தண்டனைக்கு பதில் வேறு கடுமையான தண்டனைகளை வழங்க மலேசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த மரண தண்டனையை எதிர்கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது. தற்போது மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளதால் இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்ற வாய்ப்பில்லை என தெரிகிறது.

## போதைப்பொருள்களுக்கான பட்டியலில் இருந்து கஞ்சாவுக்கான தடையை நீக்கியது தாய்லாந்து



தாய்லாந்து நாட்டில் கஞ்சா பயிரிடவும், புகைக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஆசிய நாடுகளிலேயே முதன் முறையாக கஞ்சா புகைக்கவும், பயிரிடவும் அனுமதிக்கும் வகையில் புதிய சட்டத்தை அந்நாடு அறிவித்துள்ளது. இதன்மூலம் கஞ்சா செடிகளை வளர்க்கவும், புகைக்கவும் இருந்த தடைகள் நீக்கப்படுகின்றன. தாய்லாந்து இனிமேல் தங்களது வீடுகளில் காய்கறிகள் வளர்ப்பது போல் கஞ்சா செடிகளை வளர்க்க முடியும். இதுதொடர்பாக தாய்லாந்தின் பொது சுகாதார அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில், ‘ஜூன் 10ம் திகதி முதல் (இன்று) 10 லட்சம் கஞ்சா செடிகளை வளர்க்க திட்டமிட்டுள்ளோம்.

மருந்து மற்றும் தொழில்நுட்பத்திற்காக கஞ்சாவைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. போதைப்பொருள் பட்டியலில் இருந்து கஞ்சாவை நீக்கியுள்ளோம். இருந்தும் கஞ்சா புகைப்பதை அரசு ஆதரிக்கவில்லை’ என்று கூறினார். கஞ்சாவை தடை செய்யப்பட்ட போதைப் பட்டியலில் இருந்து நீக்கியதால், ஏற்கனவே சிறைகளில் அடைக்கப்பட்ட கஞ்சா குற்றவாளிகள் 3,000க்கும் மேற்பட்டோர் விடுவிக்கப்பட்டனர். அவர்களை, அவர்களது உறவினர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

## பிரபல பாப் இசை பாடகர் ஜஸ்டின் பீய்பரின் முகம் முடக்கவாத நோயால் பாதிப்பு



‘பபி’ பாடல் மூலம் பிரபலமடைந்த பாப் பாடகர் ஜஸ்டின் பீய்பருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் அதிகம். 28 வயதாகும் அவர் கனடாவின் டொரண்டோவில் நடைபெற இருந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்கு முன் தான் ‘ராம்சே ஹன்ட் சிண்ட்ரோம்’ என்ற பாதிப்புக்கு உள்ளாகியுள்ளேன் என தெரிவித்தார். இது வைரஸ் தாக்குதலால் ஏற்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிட்டார். இதுகுறித்து பேசிய அவர் கூறியதாவது:–

இந்த பாதிப்பால் என் முகத்தின் ஒரு பக்கம் முழு அளவில் முடங்கி போயுள்ளது. அதேசமயம் எனது கேட்கும் திறனையும் இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. என் மூக்கையும் ஒரு பக்கம் அசைக்க முடியவில்லை. அதனால், எனது நிகழ்ச்சிகளை நான் ரத்து செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். இதனால் பெருத்த ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு, என்னால் உடல்ரீதியாக, செயல்பட முடியவில்லை என வெளிப்படையாக தெரிவித்து கொள்கிறேன். இதிலிருந்து குணமடைய முகத்திற்கு வேண்டிய பயிற்சிகள் அளித்து வருகிறேன். ஓய்வு எடுத்து கொள்கிறேன். நான் என்ன சாதிக்க வேண்டும் என பிறந்தேனோ அதற்காக தயாராகி 100 சதவீதம் முழுமையாக திரும்பி வருவேன். இவ்வாறு ஜஸ்டின் பீய்பர் தெரிவித்தார்.

இதையடுத்து அவருக்கு பலரும் ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

## சிகரெட்டின் மீது எச்சரிக்கை வாசகம் பதிக்கும் கனடா அரசு

*கனடா நாட்டில் சிகரெட்டால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் விளைவுகளை தடுப்பதற்கான நோக்கில் ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் புகைப்பிடிப்பது பற்றிய எச்சரிக்கை வாசகம் ஒன்றை பதிவு செய்ய அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இதுபற்றி கனடாவின் மனநலம் மற்றும் போதைக்கு அடிமையாதல் துறைக்கான மந்திரி கரோலின் பென்னட் செய்தியாளர்களிடம் கூறும்போது, புகையிலை பொருள்களில் தனியாக இதுபோன்ற சுகாதார எச்சரிக்கைகளை விடுப்பது என்பது, அத்தியாவசிய தகவல்களை மக்களிடம் சென்று சேர்க்க உதவும். சமூக சூழ்நிலைகளால் ஒரு முறை சிகரெட் புகைக்க செல்லும் இளைஞர், சிகரெட் பாக்கெட்டின் மீது உள்ள எச்சரிக்கை வாசகங்களை புறந்தள்ளி விட்டு செல்கிறார். இது தவிர்க்கப்படும் என கூறியுள்ளார். இந்த எச்சரிக்கை பற்றிய புதிய மாற்றத்திற்கான ஆலோசனை காலம் இன்றில் இருந்து தொடங்க இருக்கிறது. வருகிற 2023ம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் இருந்து புதிய நடைமுறை செயல்பாட்டுக்கு வரும் என அரசு எதிர்பார்க்கிறது. அந்த சிகரெட்டுகளின் மீது பதிக்கப்படும் சரியான வாசகம் மாற்றப்படலாம் என கூறியுள்ள பென்னட் தற்போது, ஒவ்வொரு முறை இழுக்கும்போதும் விஷம் உள்ளே செல்கிறது என்ற வாசகம் ஒப்புதலுக்காக உள்ளது என்று கூறியுள்ளார். இதனால் உலக அளவில், ஒவ்வொரு சிகரெட் மீதும் எச்சரிக்கை வாசகம் பதிக்கும் முதல் நாடாக கனடா மாறவுள்ளது.*



## தாய்வான் மீது போர் தொடுப்போம்?

### சீன அமைச்சர் எச்சரிக்கை

சீனாவின் எல்லையில் அமைந்துள்ள தாய்வான் மீது சீனா படையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்க தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. இந்நிலையில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஷங்ரிலா பாதுகாப்பு உச்சிமாநாட்டில் அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின், சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங்கை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பில் தாய்வான் பிரச்சினையை பற்றி இருவரும் விவாதித்தனா. அப்போது அமெரிக்க பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின், தாய்வான் நாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கையை சீனா தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தினார். இதற்கு பதிலளித்த வெய் பெங், தாய்வானை சீனா நாட்டின் ஒரு பகுதியாக கருதுகிறது. தாய்வானை சீனாவில் இருந்து பிரிக்க துணிந்தால் அதன் மீது போர் தொடுக்கவும் சீனா தயங்காது. மேலும், சில நாடுகள் சீனாவைக் கட்டுப்படுத்த தாய்வானை பயன்படுத்துவது ஒருபோதும் வெற்றிபெறாது. தாய்வானின் சுதந்திரம் என்னும் சதியை முறியடித்து நாட்டின் ஒருங்கிணைப்பை சீனா உறுதிசெய்யும். இவ்வாறு சீன அமைச்சர் தெரிவித்தார்.



# இலங்கையின் நிலை இந்தியாவுக்கும் வரலாம் எச்சரிக்கை விடுத்துள்ளார் சிதம்பரம்



நாட்டின் பணவீக்கம் மேலும் உயரும், வட்டி விகிதமும் உயரும் என முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். காரைக்குடியில் இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், இலங்கை தனிநபர் வருமானம் அதிகம் இருந்த நாடு, எழுத்தறிவு பெற்ற நாடு, அந்த நாட்டுநிகழ்வுகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். ஒன்றிய அரசின் தவறான முடிவுகளால் நாட்டின் பணவீக்கம் மேலும் உயரும், வட்டிவிகிதமும் உயரும் என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் முடிவு நமக்கும் வரலாம் என்றும் ப.சிதம்பரம் எச்சரிக்கை விடுத்தார். 2 ஆயிரம் ரூபா நோட்டு அச்சடித்ததே தவறு, ரிசர்வ் வங்கி கவர்னரை கட்டாயப்படுத்தியே நோட்டு அச்சடித்தார்கள் என்று கூறினார். பெற்றோல், டீசல், விலை உயர்வுக்கு தாறுமாறாக வரிவிதித்தது ஒன்றிய அரசு தான் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பகிர்ந்துகொள்ள கூடிய வரியை குறைத்து பகிர்ந்துகொள்ளாத வரியை உயர்த்தியதே குளறுபடிக்கு காரணம் என்றும் பொதுத்துறை வங்கிகள் கொடுத்த கடனை பொதுத்துறை வங்கிகள் தான் வசூலிக்க வேண்டும், தனியாருக்கு வசூலிக்க உரிமை அளிப்பது தவறு என்றும் மேலும் குறிப்பிட்டார்.

## நஷனல் ஹெரால்டு பண மோசடி வழக்கு; ஜின் 23 விசாரணைக்கு ஆஜராகுமாறு சோனியா காந்திக்கு மீண்டும் சம்மன்



நஷனல் ஹெரால்டு பண மோசடி வழக்கில் வரும் 23ம் திகதி விசாரணைக்கு ஆஜராகுமாறு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு அமுலாக்கத்துறை மீண்டும் சம்மன் அனுப்பியுள்ளது. இந்த வழக்கில் கடந்த 8ம் திகதி விசாரணைக்கு ஆஜராகுமாறு சோனியா காந்திக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் கொரோனாத் தொற்றில் இருந்து குணம் அடையாதமையால் விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து அவர் விலக்கு கோரியிருந்தார். தற்போது தொற்றில் இருந்து குணமடைந்து வருகின்றமையால் விசாரணைக்கு ஆஜராக அமுலாக்கத்துறை உத்தரவிட்டுள்ளது.

இதே வழக்கில் வரும் 13ம் திகதி டெல்லியில் உள்ள அமுலாக்கத்துறை இயக்குநரகத்தில் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி விசாரணைக்கு ஆஜராகவுள்ளார். முன்னதாக வெளிநாட்டில் இருப்பதால் விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து அவர் விலக்கு கோரியிருந்தார். சோனியா காந்தி, ராகுல் காந்தி இருவரும் இயக்குநர்களாக உள்ள யங் இந்தியா நிறுவனம் அசோசியேட் ஜெர்னல்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான நஷனல் ஹெரால்டு பத்திரிகையை விலைக்கு வாங்கியது. இதில் பெரிய அளவில் பண மோசடி நடைபெற்றதாக சுப்பிரமணியன் சுவாமி தொடர்ந்த வழக்கின் பேரில் அமுலாக்கத்துறை விசாரணை நடத்தி வருகிறது.

## இந்தியா ஆன்மீகத்திலும் வளர்ச்சியடைவது அவசியமாம்

### ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவிப்பு




இந்தியாவில் ராணுவம், பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைப்போல ஆன்மீகத்திலும் வளர்ச்சி அவசியம் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசுகையில், ஆன்மீகத்தில் வளர சனாதன தர்மம் வழிமுறையாக இருக்கும். தொடர்ச்சியான ஆன்மீகத்தில் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சி-யாக அமையும். இந்தியாவின் தலைமைத்துவம் ஆன்மீகத்தின் மீது நம்பிக்கை கொண்டதாக இருக்க வேண்டும். தற்போது வலிமையான தலைமை இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, வேற்றுமையில் ஒற்றுமை என நாட்டை பற்றி கூறுகிறோம், ஆனால் சனாதன தர்மமும் அதையே கூறுகிறது. சோமநாதர் கோயில் சொத்துகளை அழித்து காந்தகர், பொவர் நகரங்களை கஜினி முகமது உருவாக்கினார். அந்த நகரங்கள் அமெரிக்காவில் தகர்க்கப்பட்டன. இதில் இருந்தே சனாதன தர்ம வலிமையை அறியலாம் என கூறினார். ரிஷிகளாலும் முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியாலும் இந்த நாடு உருவாக்கப்பட்டது எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

## திருப்பதி கோவில் உண்டியலின் மே மாத வருமானம் 130 கோடி ரூபா



திருப்பதி ஏழுமலையான் கோவிலின் கடந்த மே மாத உண்டியல் வருமானம் ரூ.130 கோடி என கோவில் நிர்வாகம் அறிவித்தது. திருப்பதி தேவஸ்தான வரலாற்றிலேயே இதுவே அதிகபட்ச உண்டியல் வருமானம் என தெரிவித்தது.

# கோயம்புத்தூர், ராமநாதபுரம் மேம்பாலங்களை திறந்து வைத்தார் தமிழக முதல்வர் ஸ்டாலின்



கோயம்புத்தூர் நகரில் ரூ.230 கோடி செலவில் ராமநாதபுரம் மற்றும் சுங்கம் முக்கிய சந்திப்புகளில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் ரூ.60 கோடி செலவில் கவுண்டம்பாளையம் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் ஆகிய-வற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (11.6.2022) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர் நகரில் ரூ.230 கோடி செலவில் ராமநாதபுரம் மற்றும் சுங்கம் முக்கிய சந்திப்புகளில் தே.நெ.எண். 67ல் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் அதே தேசிய நெடுஞ்சாலையில் ரூ.60 கோடி செலவில் கவுண்டம்பாளையம் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா, போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை பராமரிப்பதும், மேம்பாடு செய்வதும் மற்றும் கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதும் நெடுஞ்சாலைத் துறையின் முக்கிய பணிகளாகும். தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறை வாயிலாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை சிறந்த முறையில் உருவாக்கி, பராமரித்து வருகிறது.

அந்த வகையில், ராமநாதபுரம் மற்றும் சுங்கம் சந்திப்பில் ரூ.230 கோடி செலவில் 3.15 கி.மீ. நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள 4 வழித்தட மேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பாலம் திறக்கப்படுவதால், ராமநாதபுரம், ஒலம்பஸ் மற்றும் சுங்கம் ஆகிய மூன்று முக்கிய சந்திப்புகள் மற்றும் அல்வேனியா பள்ளி சந்திப்பு, சவுரிபாளையம் சந்திப்பு, புளியகுளம் பிரிவு சாலை சந்திப்பு, வானொலி நிலையம் சந்திப்பு, பந்தய சாலை சந்திப்பு, வாலாங்குளம் சாலை சந்திப்பு ஆகிய ஆறு இதர சந்திப்புகளிடையே உள்ள போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, சிக்னல் மற்றும் சந்திப்புகளில் வாகனங்கள் நின்று செல்வதால் ஏற்படும் காலதாமதமும் தவிர்க்கப்படும்.

அத்துடன் விபத்துக்களை தவிர்ப்பதற்கும் இது உதவும். மேலும், சிங்காநல்லூரிலிருந்து அரசு மருத்துவமனை, ரயில் நிலையம், நகர்மண்டபம், உக்கடம் ஆகிய பகுதிகளுக்கு மக்களால் போக்குவரத்து நெரிசலின்றி எளிதாக செல்ல முடியும். இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவர். மேலும், கோயம்புத்தூர் நகரில், கவுண்டம்பாளையம் சந்திப்பில் ரூ.60 கோடி செலவில் 1.17 கி.மீ. நீளத்திற்கு கட்டப்பட்டுள்ள 4 வழித்தட மேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சரால் இன்று திறக்கப்பட்டது.

இப்பாலம் திறக்கப்படுவதால், கவுண்டம்பாளையம் மற்றும் நல்லாம்பாளையம் சாலை சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறையும். இதன்மூலம் கோவையிலிருந்து மேட்டுப்பாளையம், குன்னூர், ஊட்டி, கூடலூர் மற்றும் மைசூர் செல்லும் வாகனங்கள் எளிதாக செல்ல முடியும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) ந.பாலமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# நிந்தவூர்க் கரையோரங்களை காவு கொள்ளும் கடல் அரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் பாரிய கடலரிப்பிற்கு உள்ளாகி வருகின்றன. கடற்கரை பகுதியில் உள்ள சுமார் 100 மீற்றருக்கு அதிகமான நிலப்பரப்பு கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது. 75 இற்கும் மேற்பட்ட காணிகள் மற்றும் தென்னந் தோட்டங்களும் கடலரிப்பால் அழிந்துள்ளன.

இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலை மாற்றங்களினால் கடலரிப்பு அதிகமாக ஏற்படுகிறது. இதனால், கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.கடந்த சில நாள்களாக ஏற்பட்ட கடலரிப்பினால் இப்பிரதேச கடற்கரை பிரதேசத்தில் தென்னை மரங்கள் வீழ்ந்துள்ளன. கரையோரங்களில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களின் ஒரு பகுதி முற்றாக இடிந்து கடலுக்குள் வீழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கடலரிப்பினால் அப்பகுதியில் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். கடந்த சுனாமி பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருகின்றனர். அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் தாம் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடல் அரிப்பு மோசமாக அதிகரித்து வருகின்ற நிலையில், அதை எதிர்கொள்ள நிரந்தத் தடுப்புநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறாத கரையோரப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கையாக கரையோரம் பேணல் திணைக்களத்தினால் சுமார் 100 மீற்றர் நீளத்துக்கு கற்களை கொண்டு தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைகள் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன எனச் செய்திகள் வெளியாகி இருந்தன.

மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற பகுதிகளில் கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் அமைப்பது அவர்களின் நாளாந்த தொழிலுக்கு தடையாக அமையும் என்பதனால் கரையோரம் பேணல் திணைக்களத்தினால் இப்பகுதியில் மண் மூடைகள் (Geo bag) இடுவதற்காக திட்டமிட்டிருந்தது. பைகளில் மண் இட்டு நிரப்பி கடல் அரிப்பை தடுக்கும் இந்த முறைமை கரையோரம் பேணல் திணைக்களத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆற்று மீன்களின் விலைகள் அம்பாறையில் திடீர் உயர்வு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஆற்று மீன்களின் பிடிபாடு குறைவடைந்து காணப்படுவதால் மீன் வகைகளின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.கடும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் பெரியநீலாவணை முதல் பொத்துவில் பகுதி வரையுள்ள பகுதிகளில் இவ்வாறு மீன்களின் பிடிபாடு பெருமளவில் குறைவடைந்துள்ளது.

கடும் வறட்சியுடனான காலநிலை, எரிபொருள்களின் விலை ஆகியவை காரணமாக ஆற்று மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறால் ஒரு கிலோ 1,600 ரூபாவாகவும், கணவாய் ஒரு கிலோ 1,800 ஆகவும், செப்பலி (கோல்டன்) ஒரு கிலோ 900 ரூபாவாகவும், மீசை பனையான் ஒரு கிலோ 600 ரூபாவாகவும், மணலை மீன் 1,400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஏனைய சில்லறை மீன் வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

கல்முனை மாநகரை அண்டிய மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளிலுள்ள மீன் சந்தைகளிலும் ஏனைய நிந்தவூர், மாளிகைக்காடு மீன் சந்தைகளிலும் கொண்டு வரப்படுகின்ற மீன்களின் வகைகள் மிகவும் குறைவடைந்துள்ளமையால் மீன்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஆற்றை அண்டிய பகுதிகளில் விற்கப்படும் விலைகளிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகரிப்பில் மேற்படி சந்தைகளில் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதியில் கருவாடுகளுக்கு கிராக்கி நிலவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆலங்குளம் வைத்தியசாலை புனரமைத்து மீண்டும் திறப்பு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள ஆலங்குளம் ஆரம்ப வைத்தியசாலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள இவ்வைத்தியசாலை 1994ஆம் ஆண்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் நிர்மாணிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக புனரமைப்பின்றி காணப்பட்ட இவ்வைத்தியசாலையின் கட்டடம் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எடுத்துக் கொண்ட அயராத முயற்சி காரணமாக சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் அனைத்தும் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு, மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.முபாரிஸ் தலைமையில் இடம்பெற்ற இதன் திறப்பு விழாவில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வைத்தியசாலையின் சேவைகளை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.ஐ.எம்.தௌபீக், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.எம்.வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம்.மாஹிர், மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வி.ரி.சர்மா, பொறியியலாளர் எம்.எம்.எம்.ஹக்கீம் உள்ளிட்டோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இவ்வைத்தியசாலையினால் முன்னெடுக்கப்பட வேண்டிய சேவைகள், அதற்காக ஏற்படுத்தப்பட வேண்டிய மேலதிக வசதிகள், எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலும் இடம்பெற்றன.

# நிர்ணய விலையை மீறி அரிசியை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் மகேசன் அதிரடி





யாழ் மாவட்டத்தில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்பனை செய்வோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் பொருள்களுக்கான விலை அதிகரித்துள்ள நிலை காணப்படுகின்றது.

பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் வியாபாரிகள் அத்தியாவசியப் பொருள்களை மிகவும் நியாயமான விலையில் பொது மக்களுக்கு வழங்க வேண்டும்.

அதே நேரத்தில் தற்போது அரசாங்கம் அரிசிக்குரிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளது. அந்த நிர்ணயவிலைக்கு உட்பட்ட வகையில் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும்.

சில்லறை விற்பனையாளர்களும் இந்த விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும். அரிசியை அதிக விலைக்கு விற்று பாவனையாளர்களை அதிக கஷ்டத்துக்கு உள்ளாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அதே நேரத்தில் அரசாங்கம் நிர்ணயித்த விலை நியாயமான விலையாகக் காணப்படுகின்றது அதே நேரத்தில் எதிர்காலங்களில் யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஊடாக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

யாழ் மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினரின் கண்காணிப்பின் மூலம் கட்டுப்பாடு விலையியை மீறி அரிசி விற்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம்

எனவே பொதுமக்களுக்கு கஷ்டம் ஏற்படுத்தும் வகையில் அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்க வேண்டாம் என யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தினரிடம் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

ஆயினும், யாழ்.மாவட்டத்தில் 230 ரூபா நிர்ணயிக்கப்பட்ட நாட்டரிசி 340 ரூபாவுக்கு மேலாக வர்த்தகர்களால் விற்பனை செய்யப்படுகின்றமையுடன் இந்த விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மடு திருத்தல திருவிழா; கலந்துரையாடல் நேற்று நடந்தது



எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவிற்கான முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்றுக் காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்,பிரதேச செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த இரண்டு வருடங்கள் கொரோனா தொற்று காரணமாக அதிகமான மக்கள் மடு திருத்தலத்துக்கு வருகை தரவில்லை.

இம்முறை ஆடி திருவிழாவிற்கு சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இம்முறை மடுத்திருத்தல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான உணவகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நியாயமான விலையிலும், சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக உணவுப் பொருள்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் மற்றும் நுகர்வோர் அதிகாரசபையினர் முழுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

பிரதேச சபையின் அறிக்கையின் படி இம்முறை வியாபார நிலையங்களுக்கு வரி அறவிடப்படாது விட்டாலும்,ஆவணி திருவிழாவிற்கு அமைக்கப்படும் கடைகளுக்கு வரி அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு உணவகம் மற்றும் ஏனைய வியாபார நிலையங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சோதனை கெடுபிடிகளை குறைத்துக் கொள்ள மன்னார் மாவட்டத்தில் இருந்து மடு திருத்தலத்துக்கு வரும் பக்தர்கள் தமது பயண பொதிகளை கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ள கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஆடி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் திகதி திருவிழா நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.





# பவித்ரா வன்னியாராச்சி மீண்டும் அமைச்சராகிறார்?

மகளிர், சிறுவர் விவகார அமைச்சு பவித்ரா வன்னியாராச்சிக்கு வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் சில தினங்களுக்குள் இந்த நியமனம் வழங்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று ஜனாதிபதியால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இரண்டு அமைச்சுக்களில் ஒன்று வர்த்தகர் தம்மிக்க பெரேராவிடம் கையளிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் மகளிர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கள் என்பன ஜனாதிபதியால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தம்மிக்க பெரேராவிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ பதவி விலகியமையை அடுத்து, குறித்த வெற்றிடத்திற்கு தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளார் எனவும் அவருக்கு புதிய அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தம்மிக பெரேரா தனது அனைத்து நிறுவனங்களின் நிர்வாக உறுப்பினர் பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. அத்துடன், தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன் என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2022இல் வெளியிடப்பெற்றது.